**தலைப்பு 18 – பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடா அலுவலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 18 – பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடா அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதி அலுவலகத்தின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும், பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

அலுவலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 40.30 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 39.29 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1.01 மில்லியன் அதாவது 2.51 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 38.45 | 38.01 | 0.44 | 1.14 |
| மூலதனம் | 1.85 | 1.28 | 0.57 | 30.81 |
| மொத்தம் | **40.30** | **39.29** | **1.01** | **2.51** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அலுவலகத்திற்குரிய 01801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 1.69 | 1.61 | 1.29 | 2.04 | 6.50 | 4.24 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அலுவலகத்தின் கீழான கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 31,606 ஆக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடா அலுவலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடா அலுவலகத்தில் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடா அலுவலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2016 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை | | |
| 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கை | 203,590 | 02 கடமை நாட்களின் போது 37 அலுவலக உத்தியோகத்தர்களுக்காக வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு பொருத்தமான நிறுவன மொன்றை தெரிவுசெய்யும் போது கூடிய தொலைவில் அமைந்துள்ள இடமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதனால் அரசிற்கு கூடிய பொருளாதார நன்மைகள் கிடைக்கக்கூடிய வகையில் அரசின் நிதியை பயன்படுத்துவது தொடர்பில் அலுவலகத்தின் கவனம் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2013 ஏப்ரல் 22 ஆந் திகதிய 05/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02(அ) ஆம் பந்தி | சீருடை படிகளுக்குரித்தான 16 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,000 வீதம் ரூபா 32,000 தொகையும், படிகளுக்கு உரித்துப் பெறாத 12 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6,000 வீதம் ரூபா 72,000 தொகையும் அலுவலகத்தினால் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற வகையில் இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட ஒரு சந்தர்ப்பம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்களிலிருந்து விலகுதல்**

சந்தை ஒப்பீட்டு முறைமையின் பிரகாரம் ரூபா 909,897 இற்கு கொள்வனவு செய்வதற்கும் திருத்தங்களைச் செய்யும் போதும் 03 விலை விபரங்களுக்கு குறையாத எண்ணிக்கையொன்றில் கோரி விலை மற்றும் பொருட்கள் என்பவற்றை ஒப்பிடுதல் மற்றும் கேள்வியை பகிரங்கமாக திறத்தல் மற்றும் அது தொடர்பாக அறிக்கைகளை வைத்திருத்தல் போன்ற அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 04 | 03 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 15 | 11 | 04 |
| (iv) | ஆரம்ப நிலை | 18 | 16 | 02 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக /ஒப்பந்த அடிப்படை | 02 | - | 02 |
| | மொத்தம் | 44 | 35 | 09 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டு இறுதி வரையில் 09 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்த போதிலும், அச்சேமிப்புக்கள் தொடர்பில் பதவியணியினர் வெற்றிடமாக காணப்பட்டமை தாக்கமளித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் மிகை மதிப்பீடொன்று கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.